2006 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியே மாவட்ட சமூக நலத் துறை அலுவலகம் செயல்படுத்த, அரசு ஆணை எண் 53—ல் மே 26 ஆம் தேதியன்றே, ஏற்கெனவே, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாணையின் அடிப்படையில் அவ்வலுவலகம் ஜூலை 1—ம் தேதி முதல் தனியே செயல்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட சமூக நல அலுவலகம் தவிர, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி அலுவலகமும், மாவட்ட ஊனமுற்றோர் மறு வாழ்வு அலுவலகமும் புதிதாகத் தொடங்கிச் செயல்பட, தனித் தனியே ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வலுவலகங்களில் பணியாளர்கள் பணி புரிவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வலுவலகம் செயல்பட அதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு உறுப்பினருக்கு உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியாக சமூக நலத் துறை அலுவலகம் தந்திருப்பதாக நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அறிவிப்புக்கு நன்றி. இந்தக் கேள்வி, இரண்டு மாதங்களுக்கு முன்பாகக் கொடுக்கப்பட்ட கேள்வி. ஆகவே, அந்த அறிவிப்புக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக, நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

118—

சிட்டா நூல்

***785—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், சென்னிமலைப் பகுதியில் சிட்டா நூலுக்கு இரண்டு விழுக்காடு வரி நீக்கம் செய்யப்படுமா?

TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவாளர் சங்கங்களும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வைத்த கோரிக்கை ஏற்கப்பட்டு, அரசாணை நிலை எண் 71–ல் 22–7–2006–ல் நிதிநிலை அறிக்கையில், அறிவிக்கை வெளியிடப்பட்டு, சிட்டா நூலுக்கான வரி முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.*

திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள், கடந்தகால ஆட்சியில் கஞ்சித் தொட்டிக்கு அனுப்பிய நெசவாளர்களை மீட்டு, சிட்டா நூலுக்கு வரி விலக்கைத் தந்து, அதோடு மட்டுமல்லாமல், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத்தையும் அளித்து, அள்ளித் தந்து, நெசவாளர்களுடைய வாழ்க்கையை வளமாக்கியிருக்கிறார்கள். விவசாயிகளுடைய வாழ்க்கையை வளமாக்கி, கடன்களைத் தள்ளுபடி செய்து, சாதனை படைத்திருக்கிறார் தலைவர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கு விவசாயம், நெசவும் சார்ந்திருக்கிற காங்கேயம் தொகுதி மக்களின் சார்பிலே, நெசவாளர்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு விவசாயி சம்பந்தப்பட்ட ஒரு சின்ன கோரிக்கையையும் வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு VAT வரி அமல்படுத்தப்படும் என்ற செய்தி வந்திருக்கிறது. VAT அமல்படுத்தப்படுகிறபோது, non-branded, அதாவது brand இல்லாமல் வருகிற வெண்ணெய்க்கு, விவசாயிகள் தங்களுடைய கால்நடைமூலமாக வருகிற பாலைக்கொண்டு, அதைத் தயிராக்கி வெண்ணெயாகத் தயார் செய்து விற்கின்றபோது, அதற்கு 12.5 சதவீதம் வரி VAT மூலமாக வரும் என்கிற அச்சம், விவசாயிகள் மத்தியிலே நிலவிக் கொண்டிருக்கிறது. அப்படி VAT அமல்படுத்தப்படுகிறபோது, வெண்ணெய்க்கு விதிக்க இருக்கிற 12.5 சதவீதம் வரிக்கு, கேரள மாநிலத்தைப்போல, விலக்களிக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, VAT அறிவிப்புக்கான அந்த முகாந்திரம், Bill, அறிமுகம்*

2006 ஆகஸ்ட் 29]

செய்யப்பட இருக்கிறது. அதற்குப் பின்னர், இதுபற்றிய கருத்துருக்கள் ஏற்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

120—

மீனவர் பயிற்சிப் பள்ளி

***1482—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர் பயிற்சிப் பள்ளி அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், ஏற்கெனவே நான்கு இடங்களில் மீனவர் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில், மீனவர் பயிற்சிப் பள்ளி அமைத்துத்தர திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு, இயற்கையாக அமைந்த மீன் பிடித் துறைமுகம். எல்லா வசதிகளும் அமைந்துள்ளன. அண்மையில் கடல் வசதியுள்ளது. தூரத்திலும் ஆழமான கடல் வசதி உள்ளது. நிறைய மீனவக் கிராம மக்கள்தொகை கொண்ட, மீனவர் கிராமங்கள் உள்ளன. மீன்பிடித் தொழிலுக்குரிய வலை பின்னுதல். கடலில் படகுகள் தொழிலுக்குப் போகும்போது, இயந்திரக் கோளாறு போன்றவை ஏற்படுகிறபோது, அவசியம் பயிற்சி தேவைப்படுவதால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், மீண்டும் மறுபரிசீலனை செய்து, சீர்காழி தொகுதி, பழையாறில் மீனவர் பயிற்சிப் பள்ளியை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.